





அமரர் திரு. சோமசுந்தரம் இராஜேந்திரம்
அவர்களின் நினைவுவெளியீடான

# இராஜேந்திர தீபம்

12.04.2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யா/ காரைநகர், மூக்கம்பிட்டியை பிறப்பிடமாகவும்
யாழ்ப்பாணம் மற்றும் கொழும்பை வதிவிடமாகவும்
கொண்டவரும், இறைபதம் அடைந்தவருமாகிய
சைவ வேளாண் குலத்தவர்

# அமரர் திரு. சோமசுந்தரம் இராஜேந்திரம்

அவர்களின் சிவபதப்பேறு குறித்த

# இராஜேந்திர தீபம்

12.04.2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சமர்ப்பணம்

எமது இதயத் தெய்வத்தின்
திருப்பாதங்களுக்குத்
தீபச் சுடரைக் காணிக்கையாக்கின்றோம்.
மனிதருள் மாணிக்கமாய்,அன்பு நிறைந்த
பேரொளியாய்,இன்சொல் பேசி நண்பனாய்,
ஆசானாய்,அன்புடன் எம்மைப் பேணி,
கல்வி அறிவுடன்,துணிவு,பாசம்,ஒழுக்கம்,
பணிவு,இறைபக்தி என்பவற்றை
எமக்கு ஊட்டிய அப்பாவே,
இறக்கும் வரை இன்முகத்தினாய்
வாழ்வாங்கு
வாழ்ந்து இன்று வானுறையும்
தெய்வமாகிவிட்ட எமது பாசமிகு
தெய்வமே,
உமது திருப்பாதங்களில் இம்மலரைச்
சமர்ப்பணம் செய்கின்றோம்.
ஓம் சாந்தி,சாந்தி,சாந்தி

-குடும்பத்தினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மண்ணுலகில்
14.06.1947

விண்ணுலகில்
16.03.2013

அமரர்

# சோமசுந்தரம் இராஜேந்திரம் அவர்கள்

## திதிவெண்பா

நந்தன வருடம் பங்குனித் திங்கள் இரண்டாம் நாள்
வெள்ளி பின்னிரவு சதுரத்தித் திதியில்-மாண்புடனே
சோமசுந்தரம் இராஜேந்திரன் உறவுகளைத் துறந்து
சிவபதம் அடைந்தார் நன்றே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராசனின் வரலாறு

இந்து சமுத்திரத்தின் முத்தான இலங்காபுரியில் சிவன் உறையும் ஊரான காரைநகரில் எகலிய கொட உயர் சைவகுல வேளாண் அமரர்களான சோமசுந்தரம் மகாலட்சுமி தம்பதிகளின் மூன்றாவது மகவாக 1947ம் வருடம் ஆனி மாதம் 14ம் நாள் இராஜேந்திரம் இந்த மண்ணில் அவதரித்தார். இவருக்கு இரண்டு ஆண் சகோதரர்களும், ஆறு சகோதரிகளும் ஆக மொத்தம் எட்டு உடன் பிறப்புக்கள் உள்ளனர்.

அன்னார் தனது ஆரம்பக்கல்வியை காரைநகர் ஆயிலி பாடசாலையிலும் பின்பு காரைநகர் யாழ்ரன் கல்லூரியிலும் தொடர்ந்தார். தனது சாதாரண தரத்தை முடித்த இவரால் தனது உயர் கல்வியை தொடரமுடியாமல் அன்னாரது தந்தையின் மரணம் தடுத்தது. குடும்ப பொருளாதார சூழ்நிலை காரணமாக இளம் வயதில் கடுமையாக உழைக்கத் தொடங்கினார்.

வியாபார நிறுவனங்களில் உதவியாளராகவும், காசாளராகவும் அன்னார் வேறு வேறு இடங்களில் உள்ள வியாபார நிறுவனங்களில் தொழில் புரிந்தார். பல்வேறு இடங்களில் உழைத்த சேமிப்பையும், அனுபவத்தையும் கொண்டு சொந்த வியாபார நிறுவனம் ஒன்றை கொழும்பு ஜிந்துபிட்டியில் 1978ல் ஆரம்பித்தார். அன்னாரின் கடின உழைப்பும், சேவையும் அன்னாரை அப்பிரதேச மக்களால் "அப்பு" என செல்லமாக அழைக்க வைத்தது.

அன்னாரின் தந்தையாரின் மறைவால் அன்னாரின் தோளின் மீது ஏற்றப்பட்ட குடும்ப பொறுப்புக்களை முடித்துவிட பெரும் போராட்டமே நடத்த வேண்டி இருந்தது. அன்பின் சகோதரிகளை தகுதியான இடங்களில் கரைசேர்ப்பது என்பதே அன்னாரின் மீது சுமத்தப்பட்ட மிக முக்கியமான குடும்பப் பொறுப்பாகும். தனயனாக தான் செய்ய வேண்டிய குடும்பப் பொறுப்புக்களை எவ்வித குறைவில்லாது நிறைவேற்றியது அன்னாரின் ஆத்மா சாந்தியடைய வழிவகுக்கும்.

இதற்கு இடையில் அன்னாரின் தாயாரின் மறைவையொட்டி அன்னார் 1981ம் ஆண்டு இல்லற வாழ்வில் இணைந்து கொண்டார். காரைநகர் செம்பாட்டை சேர்ந்த கல்கமுக அமரர் வேலுப்பிள்ளை நமசிவாயம் விசாலாட்சி தம்பதிகளின் கடைசிப்புதல்வி புஸ்பராணியை ஆவணி மாதம் 17ம் நாள் அன்னார் மணம் புரிந்தார். இவர்களது இல்லற வாழ்வில் ஐந்து மகவுகளை பெற்றெடுத்தனர். தர்ஷன், ரதீஷன், பிரசாத் எனும் மூன்று தவப் புதல்வருக்கும், வினோஜினி, றேணுகா எனும் இரண்டு தவப்புதல்வியாருக்கும் பாசமுள்ள தந்தையாவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதார மாற்றங்களும் சந்தையில் ஏற்பட்ட போட்டி காரணமாகவும் அவரது தொழில் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு இடம்மாற்றப்பட்டது. யாழ்ப்பாணத்தில் தொடங்கிய தொழிலானது நாட்டின் யுத்த நிலை காரணமாக வேறு வேறு இடங்களில் வியாபாரத்தை தொடங்கி நடத்தி இருந்தார். இவ்வாறான இடமாற்றங்களினால் தொழில் பாதிப்படைந்ததால் மீண்டும் காசாளராக பல்வேறு வியாபார ஸ்தாபனங்களில் தொழில் புரிந்தார். இறுதி காலகட்டத்தில் கொழும்பிலும் தனது தொழிலை தொடர்ந்தார். அன்னாரின் உடல்நிலை மற்றும் வயது ஒத்துழையாமையால் இவர் தனது வேலையில் இருந்து 2011ம் ஆண்டு ஓய்வு பெற்றார்.

தனது முதற்கடமையான சகோதரர்கள் சம்பந்தமான குடும்ப பொறுப்புக்களை செவ்வனே செய்து முடித்த இவரால் தனது சொந்த குடும்பப் பொறுப்புக்களை கொண்டு இழுப்பதில் நிறையவே சோதனைகளை கடக்க வேண்டி வந்தது. இருந்தும் தனது ஐந்து பிள்ளைகளுக்கும் கல்விச் செல்வத்தை கிடைக்க செய்ய தவறவில்லை. அன்னாரது முயற்சி வீண் போகாமல் அன்னாரது பிள்ளைகளும் கல்வியில் ஒரு சிறந்த இடத்தை அடைந்தார்கள். இவரது மூத்த மகன் கணக்காளராகவும், இளைய மகன் பொறியியலாளர் ஆகவும் கடல் கடந்த தேசங்களில் தொழில் புரிந்து வருகின்றார்கள்.

மூத்த புதல்வியை காரைநகர் முல்லைப்பிளவை சேர்ந்த கார்த்திகேசு சுந்தரேஸ்வரி தம்பதிகளின் இளைய மகனான நந்தகுமாரனுக்கும், இளைய புதல்வியை காரைநகர் மணற்பிட்டியை சேர்ந்த பரந்தாமன் புஸ்பாதேவி தம்பதிகளின் மூத்த புதல்வனான துவாரகனுக்கும் மணம் முடித்து கொடுத்தார். மூத்த புதல்வியின் புத்திரர்களான தருண், தினோஜ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

தன் குடும்பத்தை மட்டுமன்றித் தன் உடன் பிறந்தவர்களையும் மேனிலைக்கு கொண்டு வருவதில் அக்கறை கொண்டவர். பெரியோர் வாக்குப்படி முகத்திற்கு நேரே கதைப் பவர்களையும் வெளிப்படையாக இருப்பவரையும் ஏனொ சமுதாயம் விரும்புவதில்லை. இருந்தும் மேற்கொண்ட குணங்களையுடைய அன்னார் சமுதாயதால் விளம்பப்பட்டார். எவ்விடரினும் கொண்ட நோக்கம் தவறிடலாகாது என்பதே அன்னார் எமக்கு விட்டுச் சென்ற செய்தி நிமிர்ந்த பார்வையும் வேகநடையும் எப்போதும் ராசன் அண்ணாவை யாவருக்கும் ஞாபகப்படுத்தும்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்வார் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

எனும் வள்ளுவர் வாக்கிற்கேற்ப அன்னாருக்கு நற்கதியை வழங்க வேண்டி எல்லாம் வல்ல இறைவனை வணங்குவோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பஞ்சபுராணம்
## (விநாயகர் துதி)

கஜானனம் பூத கணாதி ஷேவிதம்
கபித்த ஜம்பூ பலஸார பக்ஷிதம்
உமாசுதம் சோக விநாச காரணம்
நமாமி விக்னேஸ்வர பாத பங்கஜம்.

## (தேவாரம்)

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்ப்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே.

## (திருவாசகம்)

மெய்தான் அரும்பி விதிர் விதிர்த்து உன் விரை ஆர் சுழற்கு என்
கைதான் தலை வைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பி உள்ளம்
பொய்தான் தவிர்ந்து உன்னைப் போற்றி சய சய போற்றி என்னும்
கைதான் நெகிழ விடேன் உடையாய் என்னைக் கண்டு கொள்ளே.

## (திருவிசைப்பா)

ஒளிவளர் விளக்கே உவப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்(து) ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (திருப்பல்லாண்டு)

பாலுக்கு பாலகன் வேண்டி அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன் மன்னிய தில்லைதன்னுள்
ஆவிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே பல்லாண்டு கூறுதுமே

## (திருப்புராணம்)

ஆதியாய் நடுவும்ஆகி அளவிலா அளவும்ஆகிச்
சோதியாய் உணர்வும்ஆகித் தோன்றிய பொருளு மாகிப்
பேதியா ஏகம்ஆகிப் பெண்ணுமாய் ஆணும் ஆகிப்
போதியா நிற்கும் தில்லைப் பொது நடம்போற்றி போற்றி.

## (திருப்புகழ்)

அகரமு மாகி யதிபனு மாகி யதிகமு மாகி அகமாகி
அயனென வாகி அரியென வாகி அரனென வாகி அவர்மேலாய்

இகரமு மாகி யெவைகளு மாகி யினிமையு மாகி வருவோனே
இருநில மீதி லெளியனும் வாழ எனதுமு னோடி வரவேணும்

மகபதி யாகி மருவும்வ லாரி மகிழ்களி கூரும் வடிவோனே
வனமுறை வேட னருளிய பூஜமகிழ்கதிர் காம முடையோனே

செககண சேகு தகுதிமி தோதி திமியென ஆடு மயிலோனே
திருமலி வான பழமுதிர் சோலை மலைமிசை மேவு பெருமாளே.

## (திருமந்திரம்)

ஐந்து கரத்தனை யானை முகத்தனை
இந்து இளம்பிறை போலும் எயிற்றினை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவ சிவ என்கிலர் தீவினையாளர்
சிவ சிவ என்றிடத் தீவினை மாளும்
சிவ சிவ என்றிடத் தேவரும் ஆவார்
சிவ சிவ என்னச் சிவகதி தானே

(அபிராமி அந்தாதி)

கலையாத கல்வியும் குறையாத வயதும்
ஓர் கபடுவா ராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றாத இளமையும்
கழுபிணி யகலாத உடலும்
சலியாத மனமும்அன் பகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத தொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலுமொரு
துன்பமில் லாத வாழ்வும்
துய்யநின் பாதத்தில் அன்பும் உதவிப் பெரிய
தொண்டரொடு கூட்டு கண்டாய்
அலையாழி அறிதுயிலு மாயனது தங்கையே
ஆதிகட வூரின் வாழ்வே
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி
அருள்வாமி அபிராமியே!

(சுந்தரர்)

பித்தா பிறை சூடி பெருமானே அருளாளா
எத்தால் மறவாதே நினைக்கின்றேன் மனத்து உன்னை
வைத்தாய் பெண்ணை தென்பால் வெண்ணை நல்லூர் அருள் துறையுள்
அத்தா உனக்கு ஆளாய் இனி அல்லேன் எனலாமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணம்



திருச்சிற்றம்பலம்

**தொல்லை யிரும்பிறவிச் சூழுந்தளை நீக்கி**
**அல்ல லறுத்தானந்தம் ஆக்கியதே - எல்லை**
**மருவா நெறியளிக்கும் வாதவூ ரெங்கோன்**
**திருவா சகமென்னுந் தேன்.**

நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க

வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறந்தார்க்குச் சேயோன் தன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன் சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
மாயப் பிறப்பு அறுக்கும் மன்னன் அடி போற்றி
சீரார் பெருந்துறை நம் தேவன் அடி போற்றி

ஆராத இன்பம் அருளும் மலை போற்றி
சிவன் அவன் என்சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவ புராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன் யான்.

கண் நுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்து எய்தி
எண்ணுதற்கு எட்டா எழில் ஆர்கழல் இறைஞ்சி
விண் நிறைந்தும் மண் நிறைந்தும் மிக்காய், விளங்கு ஒளியாய்,
எண் இறந்த எல்லை இலாதானே நின் பெரும்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்று அறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல் விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத் தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன், எம்பெருமான்
மெய்யே உன் பொன் அடிகள் கண்டு இன்று வீடு உற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயா எனவோங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே
வெய்யாய், தணியாய், இயமானனாம் விமலா
பொய் ஆயின எல்லாம் போய் அகல வந்தருளி
மெய் ஞானம் ஆகி மிளிர் கின்ற மெய்ச் சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல் அறிவே

ஆக்கம் அளவு இறுதி இல்லாய், அனைத்து உலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின் தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய், சேயாய், நணியானே
மாற்றம் மனம் கழிய நின்ற மறையோனே

கறந்த பால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்பு அறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்து உடையாய், விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய், எம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அரும் கயிற்றால் கட்டி
புறம்தோல் போர்த்து எங்கும் புழு அழுக்கு மூடி,
மலம் சோரும் ஒன்பது வாயில் குடிலை
மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய,

விலங்கு மனத்தால், விமலா உனக்கு
கலந்த அன்பாகிக் கசிந்து உள் உருகும்
நலம் தான் இலாத சிறியேற்கு நல்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலம் தன்மேல் வந்து அருளி நீள்கழல்கள் காட்டி,
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயா ஆன தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேன் ஆர்அமுதே சிவபுரானே
பாசமாம் பற்று அறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் போராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக்கு அன்பனே யாவையுமாய் இல்லையுமாய்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய் ஞானத்தால் கொண்டு உணர்வார் தம்கருத்தில்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண் உணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே
காக்கும் என் காவலனே காண்பரிய பேர் ஒளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடர் ஒளியாய்ச் சொல்லாத நுண் உணர்வாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்து அறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனை உள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்கு உடம்பின் உள்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனே ஓ என்று என்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய் ஆனார்
மீட்டு இங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டு அழிக்க வல்லானே
நள் இருளில் நட்டம் பயின்று ஆடும் நாதனே
தில்லை உள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லல் பிறவி அறுப்பானே ஓ என்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவன் அடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தர் சஷ்டி கவசம் - 2

## (திருச்சீரலைவாய் - திருச்செந்தூர்)



### காப்பு
### நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம்
துன்பம்போம் நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம்
பலித்துக் கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும்
நிமலர் அருள் கந்தர்
சஷ்டி கவசந் தனை.

### குறள் வெண்பா

அமரிடர்தீர அமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மையல் நடனஞ்செயும் மயில் வாகனனார்
கையில் வேலால் எனைக் காக்க என் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோ நம
நிபவ சரவண நிற நிற நிறென
வசர வணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசஅங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந் தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொலி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுங் சௌவும் கிளரொலி ஐயும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் தீயும் தனியொளி யொவ்வும்
குண்டலியாம் சிவகுகன் தினம் வருக
ஆறுமுகமும் அணிமுடி ஆறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத்தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயிறு உந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற் சீராவும்
இருதொடை அழகும் இணை முழந்தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி
டுடுடுடு டுடுடுடு டுடுடுடு டுடுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை ஆளும் ஏரகச் செல்வா
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோத னென்று
உன்திரு வடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழிகளால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விழிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னமிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண் குறி இரண்டும் அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத்தொடை இரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைகளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நற்றுணை ஆக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழு துன்எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அனையயிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்தில் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்கத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராக் கதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை அடியினில் அரும் பாவைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைந்த வஞ்சனை தனையும்
ஒட்டிய பாவையும் ஒட்டிய செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதும் அஞ்சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூதாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோட
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கால்கை முறிய
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்பகைச் சொக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலதுவாக
விடு விடு வேலை வெருண்டது வோட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந் தோட
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடுவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கு மொருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர் தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரணை பருஅரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீ எனக் கருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்கு உறவாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்து றவாகவும்
உன்னைத் துதிக்க உன் திருநாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழ் ஒளி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமராவதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வேலவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகாசலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா இருக்க யானுனைப் பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புடன் இரட்சி அன்னமுஞ் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலாயுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசன்
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை அடியேன் எத்தனை செய்யினும்
பெற்றவன் நீ குரு பொறுப்பது உன் கடன்
பெற்றவன் குறமகள் பெற்றவளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுஉன் மனமகிழ்ந்த தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் கஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையும் மாலையும் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடன்ஒரு நினைவது வாகி
கந்தர் சஷ்டி கவசம் இதனை
சிந்தை கலங்காது தியானிப்பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறணிய
அட்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங் கருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டா வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப் பொடியாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்டலட் சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துணவாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
என்னைத்தடுத் தாட்கொள என்றனதுள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீங்காத மனத்திரையிலிருந்து......

மாலையிட்ட நாள்முதல்
மனக்குறைகள் ஏதுமின்றி
சீலமுடனிணைந்து சேர்ந்து நாம் வாழ்ந்திருந்தோம்.

ஞாலமதில் நானிருக்க என் அன்பை நீர் மறந்து
காலவழி நடந்து தனித்து நீர் சென்றதேனோ
கரம்பிடித்த நாள்முதலாய் கருத்தினில் ஒன்றுபட்டு
எப்போதும் நின் அன்பில் இணைந்து நான் வாழ்ந்திருந்தேன்.

இப்பாரில் பொட்டிழந்து பூவிழந்து பொருந்திய தாலியிழந்து
எப்போதும் நான் புலம்ப ஏங்கவிட்டு மறந்ததேனோ?
என்றென்றும் என் உள்ளம் உம் நினைவில் சங்கமிக்கும்
என்று கூறி உம்முடைய ஆத்மா சாந்திபெற வேண்டுகிறேன்.

அன்பு மனைவி
புஸ்பராணி

## பிள்ளைகள் புலம்பல்....

விழிகள் கரைகின்றன வேதனை முடியுதே இல்லை
அப்பா உம் பாச உறவுகளை தவிக்கவிட்டு போனதெங்கே?

ஊதிய பலூனில் ஊசி துளைத்தது போல்
உங்கள் மறைவுச் செய்தி கேட்டு உதிரமே உறைந்ததப்பா
கடமை உணர்வுடனே எமை வளர்த்த அப்பாவே
காலமெல்லாம் நின்னரிய கடமையை செய்திடவே காத்திருந்தோம்

உதிர்ந்து விட்டது உங்கள் உடல்மட்டுந்தான்
வாடாமல் நிற்பது உங்கள் வாழ்க்கையின் ஞாபகப்பூக்கள்
அஞ்சலிக்காய் உங்கள் படம் முன் தலைவணங்கி
நின் ஆத்மா சாந்தி பெற வேண்டுகிறோம்

மக்கள்கள்
தர்ஷன், ரதீஷன், வினோதினி,
றேணுகா, பிரசாத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எம் மாமாவிற்கு....

தொலையாத சுறுசுறுப்பு
தொன தொனக்காத அன்புக்கட்டளைகள்
தொலைந்து விட்டது முகவரி இல்லாமலே

தொலைபேசி அழைப்பினிலே இடிவந்து விழுந்தது
தொலைதூரத்தில் இருந்து எம்மை தவிக்கவிட்டு
தொடுவானமாய் நீங்கள் மாறியசேதி

பாச உள்ளங்கள் துடிதுடித்து பரிதவிக்க
ஞாபகருடங்கள் சில்லாய் சிதறியதோ மாமா
உங்கள் பிரிவால் எம்கண்கள் கண்ணீரோடு கரைகின்றன
உங்கள் ஆத்மா சாந்திபெற ஆண்டவனை
வேண்டுகிறோம்.

உங்கள் மருமகன்கள்
நந்தகுமாரன், துவாரகன்


## அம்மப்பாவே.....

அன்பான எம் தாத்தாவே உங்களை
ஆசையாக அம்மப்பா என நாம் கூப்பிடும் - வேளையில்
நீர் இவ்வுலகை விட்டுப் போனீரோ....?

பாசத்துடன் பேரன்கள்
தருண், திேனோஜ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அன்னாரின் தாய் தந்தையார்

அமரர் சோமசுந்தரமும் அமரர் மகாலட்சுமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர் இராஜேந்திரன் துணைவியாருடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்பாடல் திரட்டு
## பட்டினத்துப் பிள்ளையார் (பட்டினத்தார்) அருளியது

1. திருவேகம்பமாலை
2. திருத்தில்லை
3. முதலாவது கோயிற்றிருவகவல்
4. இரண்டாவது கோயிற்றிருவகவல்
5. மூன்றாவது கோயிற்றிருவகவல்
6. நான்காவது கச்சித் திருஅகவல்
7. அருட்புலம்பல் - முதல்வன் முறையீடு
8. அருட்புலம்பல் - மகடூஉ முதலாக உள்ளது

### 1. திருவேகம்பமாலை

அறந்தா னியற்று மவனிலுங்கோடி யதிகமில்லந்
துறந்தான், அவனின் சதகோடி யுள்ளத்துறவுடையோன்
மறந்தா னறக்காற் றறிவோடிருந்திரு வாதனையற்று
இறந்தான் பெருமையையென் சொல்லுவேன் ? கச்சியேகம்பனே ! 1

கட்டியணைத்திடும் பெண்டிரு மக்களுங் காலத்தச்சன்
வெட்டிமுறிக்கு மரம்போற் சரீரத்தை வீழ்த்திவிட்டாற்
கொட்டிமுழக்கி யழுவார் மயானங் குறுகியப்பால்
எட்டி யடிவைப்ப ரோ? யிறைவா ! கச்சியேகம்பனே. 2

கைப்பிடி நாயகன் தூங்கையிலே யவன்கையெடுத்து
அப்புறந்தன்னி லசையாமல் முன்வைத் தயல்வளவில்
ஒப்புடன்சென்று துயில்நீத்துப் பின்வந் துறங்குவளை
எப்படிநான் நம்புவேன்? இறைவா ! கச்சியேகம்பனே ! 3

நன்னாரில் பூட்டிய சூத்திரப்பாவை நன்னார்தப்பினால்
நன்னாலுமாடிச் சலித்திடுமோ அந்தத் தன்மையைப்போல்
உன்னால்யானுந் திரிவதல்லால் மற்றுனைப் பிரிந்தால்
என்னாலிங் காவதுண்டோ? இறைவா ! கச்சியேகம்பனே ! 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லா ரிணக்கமும், நின்பூசை நேசமும், ஞானமுமே
அல்லாது வேறு நிலையுளதோ? அகமும், பொருளும்
இல்லாளும் சுற்றமும் மைந்தரும் வாழ்வும் எழிலுடம்பும்
எல்லாம் வெளிமயக்கே இறைவா, கச்சியேகம்பனே ! 5

பொல்லாதவன், நெறி நில்லாதவன், ஐம்புலன்கள்தமை
வெல்லாதவன், கல்வி கல்லாதவன், மெய்யடியவர்பால்
செல்லாதவன், உண்மை சொல்லாதவன், நின்திருவடிக்கன்பு
இல்லாதவன், மண்ணிலேன்பிறந்தேன் ! கச்சியேகம்பனே ! 6

பிறக்கும்பொழுது கொடுவந்த தில்லை, பிறந்து மண்மேல்
இறக்கும்பொழுது கொடுபோவ தில்லை இடைநடுவில்
குறிக்குமிச் செல்வஞ் சிவன் தந்ததென்று கொடுக்கறியாது
இறக்குங் குலாமருக் கென்சொல்லுவேன் ? கச்சியேகம்பனே ! 7

அன்னவிசார மதுவேவிசாரம் அதுவொழிந்தால்
சொன்ன விசாரந் தொலையா விசாரம் நல்தோகையரைப்
பன்னவிசாரம் பலகால் விசாரமிப் பாவிநெஞ்சக்கு
என்னவிசாரம் வைத்தாய் இறைவா, கச்சியேகம்பனே ! 8

கல்லாப் பிழையும், கருதாப் பிழையும், கசிந்துருகி
நில்லாப் பிழையு நினையாப் பிழையும், நின்னஞ்செழுத்தைச்
சொல்லாப் பிழையுந், துதியாப் பிழையுந், தொழாப் பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தருள்வாய் கச்சியேகம்பனே. 9

மாயநட் போரையும் மாயா மலமெனும் மாதரையும்
வீயவிட் டோடி வெளியே புறப்பட்டு மெய்யருளாம்
தாயுடன் சென்றுபின் தாதையைக் கூடிப்பின் தாயைமறந்
தேயும தேநிட்டை, யென்றா னெழிற் கச்சியேகம்பனே. 10

வரிக்கோல வேல்விழியார் அநுராக மயக்கிற்சென்று
சரிக்கோதுவேன் எழுத்தஞ்சுஞ் சொலேன், தமியேனுடலம்
நரிக்கோ? கழுகுபருந்தினுக்கோ? வெய்யநாய் தனக்கோ?
எரிக்கோ? இரையெதற்கோ? இறைவா, கச்சியேகம்பனே. 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதென்று மூக்கென்று கண்ணென்று காட்டியென் கண்ணெதிரே
மாதென்று சொல்லி வருமாயை தன்னை மறலிவிட்ட
தூதென் றெண்ணாமற் சுகமென்று நாடுமித் துர்ப்புத்தியை
ஏதென் றெடுத்துரைப்பேன்? இறைவா, கச்சியேகம்பனே. 12

ஊருஞ் சதமல்ல, உற்றார் சதமல்ல, உற்றுப்பெற்ற
பேருஞ் சதமல்ல, பெண்டீர் சதமல்ல, பிள்ளைகளும்
சீருஞ் சதமல்ல, செல்வஞ் சதமல்ல, தேசத்திலே
யாருஞ் சதமல்ல, நின்தாள் சதங்கச்சி யேகம்பனே. 13

சீறும்வினையது பெண்ணுரு வாகித் திரண்டுருண்டு
கூறுமுலையு மிறைச்சியு மாகிக் கொடுமையினால்
பீறுமலமு முதிரமுஞ் சாயும் பெருங்குழிவிட்டு
ஏறுங்கரைகண்டி லேன், இறைவா, கச்சியேகம்பனே. 14

பொருளுடை யோரைச் செயலினும் வீரரைப் போர்க்களத்தும்
தெருளுடை யோரை முகத்தினுந் தேர்ந்து தெளிவதுபோல்
அருளுடை யோரைத் தவத்திற் குணத்தி லருளிலன்பில்
இருளறு சொல்லினுங் காணத்தகுங் கச்சி யேகம்பனே. 15

பருத்திப் பொதியினைப்போலே வயிறுபருக்கத் தங்கள்
துருத்திக்கு அறுசுவை போடுகின்றார், துறந்தோர்தமக்கு
வருத்தி யமுதிடமாட்டார், அவரையிம் மாநிலத்தில்
இருத்திக் கொண்டேனிருந்தா யிறைவா! கச்சியேகம்பனே. 16

பொல்லா விருளகற் றுங்கதிர் கூகையென் புட்கண்ணினுக்கு
அல்லா யிருந்திடு மாறொக்குமே அறிவோ ருளத்தில்
வல்லா ரறியார் தமக்கு மயக்கங் கண்டாய்,
எல்லாம் விழிமயக் கேயிறைவா, கச்சி யேகம்பனே. 17

வாதுக்குச் சண்டைக்குப் போவார், வருவார் வழக்குரைப்பர்
தீதுக் குதவியுஞ் செய்திடுவார், தினந்தேடி ஒன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதுக் களித்து மயங்கிடுவார் விதி மாளுமட்டும்
ஏதுக்கிவர் பிறந்தார்? இறைவா, கச்சியேகம்பனே. 18

ஓயாமற் பொய்சொல்வர். நல்லோரை நிந்திப்பர், உற்றுப்பெற்ற
தாயாரை வைவர், சதியாயிரஞ் செய்வார். சாத்திரங்கள்
ஆயார், பிறர்க்குபகாரஞ் செய்யார், தமையண்டி னர்க்கொன்
றீயா ரிருந்தென்ன போயென்னகாண் கச்சி யேகம்பனே. 19

அப்பென்றும் வெண்மையதாயினும் ஆங்கந்நிலத்தியல் பாய்த்
தப்பின்றியே குணவேற்றுமை தான்பல சார்தலினால்
செப்பில் அபக்குவம் பக்குவமாயுள்ள சீவரிலும்
இப்படி யே நிற்பன் எந்தைபிரான் கச்சியேகம்பனே. 20

நாயாய்ப் பிறந்திடில் நல்வேட்டை யாடிநயம் புரியும்
தாயார வயிற்றில் நாராய்ப் பிறந்தபின் கம்பன்னராய்க்
காயாமரமும் வறளாங் குளமும் கல்லாவு மன்ன
ஈயாமனிதரை யேன் படைத்தாய்? கச்சி யேகம்பனே. 21

ஆற்றில் கரைத்த புளியாக்கிடாமலென் னன்பை யெல்லாம்
போற்றித் திருவுளம் பற்றுமை யாபுர மூன்றெரித்துக்
கூற்றைப் பணிகொளுந் தாளுடையாய், குன்றவில்லுடையாய்
ஏற்றுக் கொடியுடையாய், இறைவா ! கச்சியேகம்பனே. 22

பெண்ணாகி வந்தொரு மாயப்பி சாசும் பிடித்திட்டென்னைக்
கண்ணால் வெருட்டி முலையால் மயக்கிக் கடிதடத்துப்
புண்ணாங் குழியிடைத் தள்ளி என்போதப்பொருள் பறிக்க
எண்ணா துனைமறந் தேனிறைவா ! கச்சியேகம்பனே. 23

நாவார வேண்டு மிதஞ்சொல்லுவார் உனைநான் பிரிந்தாற்
சாவேனென் றேயிருந்தொக்கவுண் பார்கள்கைதான் வறளின்
போய்வாரு மென்று நடுத்தலைக் கேகுட்டும் பூவையர்க்கு
ஈவார் தலைவிதியோ? இறைவா, கச்சியேகம்பனே. 24



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லார் சிவகதை, நல்லோர் தமக்குக் கனவிலும்மெய்
சொல்லார், பசித்தவர்க் கன்னங் கொடார், குருசொன்னபடி
நில்லார், அறத்தை நினையார், நின்நாமம் நினைவில்சற்றும்
இல்லா ரிருந்தென்? இறந்தென்? புகல், கச்சியேகம்பனே. 25

வானமு தத்தின் சுவையறி யாதவர் வன்கனியின்
தானமு தத்தின் சுவையெண்ணல் போலத் தனித்தனியே
தேனமு தத்தின் தெளிவாய ஞானஞ் சிறிதுமில்லார்க்
ஈனமு தச்சுவை நன்று அல்லவோ? கச்சியேகம்பனே. 26

ஊற்றைச் சரீரத்தை யாபாசக் கொட்டிலை யூன்பொதிந்த
பீற்றற் து ருத்தியைச் சோறிடுந் தோற்பையைப் பேசரிய
காற்றிற் பொதிந்த நிலையற்ற பாண்டத்தைக் காதல் செய்தே
யேற்றித் திரிந்துவிட் டேனிறைவா, கச்சியேகம்பனே. 27

சொல்லால் வருங்குற்றஞ் சிந்தனையால் வருந்தோடஞ்செய்த
பொல்லாத தீவினை பார்வையிற் பாவங்கள் புண்ணியநூல்
அல்லாத கேள்வியைக் கேட்டிடுந் தீங்குகள் ஆயவுமற்று
எல்லாப் பிழையும் பொறுத்தருள் வாய் கச்சியேகம்பனே. 28

முட்டற்ற மஞ்சளை யெண்ணெயிற்கூட்டி முகமினுக்கி
மெட்டிட்டுப் பொட்டிட்டுப் பித்தளையோலை விளக்கியிட்டுப்
பட்டப் பகலில் வெளிமயக் கேசெயும் பாவையர்மேல்
இட்டத்தை நீதவிர்ப்பாய் இறைவா, கச்சியேகம்பனே. 29

பிறந்துமண்மீதிற் பிணியே குடிகொண்டு பேரின்பத்தை
மறந்து சிற்றின்பத்தின் மேல்மயலாகிப் புன்மாதருக்குள்
பறந்துழன்றே தடுமாறிப்பொன் தேடியப் பாவையர்க்கீந்து
இறந்திடவோ பணித்தாய் இறைவா, கச்சியேகம்பனே. 30

பூதங்களற்றுப் பொறியற்றுச் சாரைம் புலன்களற்றுப்
பேதங்குணமற்றுப் பேராசை தானற்றுப் பின்முன்அற்றுக்
காதங்கரணங்களும் அற்ற ஆனந்தக் காட்சியிலே
ஏதங் களைந்திருப் பேனிறைவா, கச்சியேகம்பனே. 31



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லா யெனக்கு மனுவொன்று தந்தருள். ஞானமிலாப்
பொல்லா எனைக்கொன்று போடும்பொழுதியல் பூசைசெபஞ்
சொல்லாநற் கோயில்நியமம் பலவகைத் தோத்திரமும்
எல்லா முடிந்தபின் கொல்லுகண்டாய் கச்சியேகம்பனே. 32

சடக்கடத்துக் இரைதேடிப் பலவுயிர் தம்மைக்கொன்று
விடக்கடித்துக் கொண்டிறுமாந் திருந்து மிகமெலிந்து
படங்கடித் தின்றுழல்வார்கள் தமைக்கரம் பற்றிநமன்
இடக்கடிக்கும் பொழுதேது செய்வார்? கச்சியேகம்பனே. 33

நாறுமுடலை, நரிப்பொதி சோற்றினை, நான்தினமுஞ்
சோறுங் கறியும்நிரப்பிய பாண்டத்தைத் தோகையர்தம்
கூறும்மலமும் இரத்தமுஞ் சோருங் குழியில்விழாது
ஏறும் படியருள்வாய் இறைவா, கச்சியேகம்பனே. 34

சொக்கிட்டு அரண்மனைப் புக்குள்திருடிய துட்டர்வந்து
திக்குற்ற மன்னரைக் கேட்பதுபோல் சிவநிந்தைசெய்து
மிக்குக் குருலிங்க சங்கமம்நிந்தித்து. வீடிச்சிக்கும்
எக்குப் பெருந்தவர்க்கென் சொல்லுவேன் ? கச்சியேகம்பனே. 35

விருந்தாக வந்தவர் தங்களுக் கன்னமிகக்கொடுக்கப்
பொருந்தார் வளம்பெற வாழ்வார்நின் நாமத்தைப்போற்றி நித்தம்
அருந்தா முலைப்பங்க ரெண்ணாதபாதகர் அம்புவியில்
இருந்தாவதேது? கண்டாய் இறைவா, கச்சியேகம்பனே. 36

எல்லாம் அறிந்து படித்தே யிருந்தெமக் குள்ளபடி
வல்லான் அறிந்துளன் என்றுணராது மதிமயங்கிச்
சொல்லான் மலைந்துறு சூழ்விதியின்படி துக்கித்துப்பின்
எல்லாம் சிவன்செயலே என்பார்காண் கச்சியேகம்பனே. 37

பொன்னைநினைந்து வெகுவாகத் தேடுவர், பூவையன்னாள்
தன்னைநினைந்து வெகுவாய் உருகுவார், தாரணியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னை நினைந்திங் குனைப்பூசியாத உலுத்தரெல்லாம்
என்னையிருந்து கண்டாய் இறைவர் கச்சியேகம்பனே. 38

கடுஞ்சொலின் வம்பரை ஈனரைக்குண்டரைக் காமுகரைக்
கொடும்பாவமே செய்யும் நிர்மூடர்தம்மைக் குவலயத்துள்
நெடும்பனைபோல வளர்ந்து நல்லோர் தம்நெறியறியா
இடும்பரை என்வகுத்தாய் இறைவா, கச்சியேகம்பனே. 39

கொன்றேன் அனேகமுயிரை எலாம்பின்பு கொன்றுகொன்று
தின்றே அதன்றியும் தீங்குசெய்தேன் அதுதீர்கவென்றே
நின்றேன் நின்சன்னிதிக்கே அதனால் குற்றம்நீபொறுப்பாய்
என்றே யுனைநம்பினேன் இறைவா, கச்சியேகம்பனே. 40

ஊரிருந்தென்ன ? நல்லோர் இருந்தென்ன உபகாரமுள்ள
பேரிருந்தென்ன ? பெற்றதாய் இருந்தென் மடப்பெண்கொடியாள்
சீரிருந்தென்ன ? சிறப்பிருந் தென்ன இத்தேயதகதினில்
ஏரிருந்தென்ன ? வல்லாய் இறைவா கச்சியேகம்பனே. 41

வில்லால் அடிக்கச் செருப்பாலுதைக்க வெகுண்டொருவன்
கல்லால் எறியப் பிரம்பால் அடிக்கக் களிவண்டுகூர்ந்து
அல்லார் பொழில்தில்லை அம்பலவாணர்க்குஓர் அன்னைபிதா
இல்லாததால் அல்லவோ, இறைவா கச்சிஏகம்பனே. 42

## திருவேகம்பவிருத்தம்

அன்னை எத்தனை எத்தனை அன்னையோ?
அப்பன் எத்தனை எத்தனை அப்பனோ?
பின்னை எத்தனை எத்தனை பெண்டீரோ?
பிள்ளை எத்தனை எத்தனை பிள்ளையோ?
முன்னை எத்தனை எத்தனை சன்மமோ?
மூடனாயடி யேனும றிந்திலேன்,
இன்ன மெத்தனை யெத்தனை சன்மமோ?
என்செய் வேன்? கச்சியேகம்ப நாதனே?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. திருத்தில்லை

காம்பிணங்கும் பணைத்தோளார்க்கும் பொன்னுக்குங் காசினிக்கும்
தாம்பிணங்கும் பலஆசையும் விட்டுத்தணித்துச் செத்துப்
போம்பிணம் தன்னைத் திரளாகக்கூடிப் புரண்டினிமேற்
சாம்பிணம் கத்துதையோ ? என்செய்வேன் தில்லைச்சங்கரனே. 1

சோறிடும்நாடு. துணிதருங் குப்பை தொண்டன்பரைக்கண்டு
ஏறிடுங்கைகள் இறங்கிடுந் தீவினை. எப்பொழுதும்
நீறிடும் மேனியர் சிற்றம்பலவர் நிருத்தம்கண்டால்
ஊறிடுங் கண்கள் உருகிடும்நெஞ்சமென் னுள்ளமுமே. 2

அழலுக்குள்வெண்ணெய் எனவே உருகிப் பொன்னம்பலத்தார்
நிழலுக்குள் நின்றுதவம் உஞற்றாமல் நிட்டூரமின்னார்
குழலுக்கிசைந்த வகைமாலை கொண்டு குற்றேவல்செய்து
விழலுக்கு முத்துலை இட்டிறைத்தேனென் விதிவசமே. 3

ஓடாமற் பாழுக்கு உழையாமல் ஓரமுரைப்பவர்பால்
கூடாமல் நல்லவர்கூட்டம் விடாமல் வெங்கோபம்நெஞ்சில்
நாடாமல் நன்மைவழுவாமல் இன்றைக்கு நாளைக்கென்று
தேடாமல் செல்வந் தருவாய், சிதம்பரதேசிகனே. 4

பாராம லேற்பவர்க் கில்லையென்னாமற் பழுதுசொல்லி
வாரமற் பாவங்கள் வந்தணுகாமல் மனமயர்ந்து
பேராமற் சேவைபுரியாம லன்புபெறா தவரைச்
சேராமற் செல்வந்தருவாய், சிதம்பர தேசிகனே. 5

கொல்லாமற் கொன்றதைத் தின்னாமற் குத்திரங்கோள்கள்
கல்லாமற் கைதவரோ டிணங்காமற் கனவினும்பொய்
சொல்லாமற் சொற்களைக் கேளாமற் றோகையர்மாயையிலே
செல்லாமற் செல்வந் தருவாய், சிதம்பர தேசிகனே. 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிசார்ந்த மன்னரு மற்றமுள்ளோரு முடிவிலொரு
பிடிசாம்ப ராய்வெந்து மண்ணாவதுங் கண்டுபின்னுமிந்தப்
பிடிசார்ந்த வாழ்வை நினைப்பதல் லாற்பொன்னினம்பலவ
ரடிசார்ந்து நாமுய்ய வேண்டுமென்றே யறிவாரில்லையே. 7

காலையுபாதி மலஞ்சல மாமன்றிக் கட்டுச்சியிற்
சாலவுபாதி பசிதாக மாகுமுன் சஞ்சிதமாம்
மாலையுபாதி துயில்காம மாமிவை மாற்றிவிட்டே
ஆலமுகந்தரு எம்பலவா, என்னை யாண்டருளே. 8

ஆயும்புகழ்ந்தில்லை யம்பலவாண ரருகிற் சென்றாற்
பாயுமிடபங், கடிக்குமரவம், பின்பற்றிச் சென்றாற்
பேயுங்கணமும் பெருந்தலைப் பூதமும் பின்தொடரும்
போயென்செய்வாய் மனமே ! பிணக்காடவர் போமிடமே. 9

ஓடுமெடுத்தத ளாடையுஞ் சுற்றி, யுலாவிமெள்ள
வீடுகடோறும் பலிவாங்கியே, விதி யற்றவர்போ
லாடுமருட் கொண்டிங்கு அம்பலத்தேநிற்கு மாண்டிதன்னைத்
தேடுங் கணக்கென்னகாண் ? சிவகாம சவுந்தரியே. 10

ஊட்டுவிப்பானு முறங்குவிப்பானுமிங் கொன்றோ டொன்றை
மூட்டுவிப்பானு முயங்குவிப்பானு முயன்ற வினை
காட்டுவிப்பானு மிருவினைப் பாசக் கயிற்றின்வழி
யாட்டுவிப்பானு மொருவனுண் டேதில்லை யம்பலத்தே. 11

அடியார்க் கெளியவ ரம்பலவாண ரடிபணிந்தால்
மடியாமற்செல்வ வரம்பெறலாம், வையம் ஏழளந்த
நெடியோனும் வேதனுங்காணாத நித்த நிமலனருட்
குடிகாணு நாங்களவர்காணு மெங்கள் குலதெய்வமே. 12

தெய்வச் சிதம்பரதேவா, உன்சித்தந் திரும்பிவிட்டாற்
பொய்வைத்த சொப்பனமா மன்னர்வாழ்வும் புவியுமெங்கே?
மெய்வைத்த செல்வமெங்கே? மண்டலீகர்தம் மேடையெங்கே?
கைவைத்த நாடகசாலையெங்கே? இது கண்மயக்கே. 13



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடுப்பானும் பாலன்னமுண்பானு முய்வித்தொருவர் தம்மைக்
கெடுப்பானு மேதென்று கேள்விசெய்வானுங் கெதியடங்கக்
கொடுப்பானுந் தேகியென்றேற்பானும் ஏற்கக் கொடாமனின்று
தடுப்பானு நீயல்லையோ? தில்லையானந்தத் தாண்டவனே. 14

வித்தாரம் பேசினுஞ் சோங்கேறினுங் கம்பமீதிருந்து
தத்தாரவென் றோதிப் பவுரிகொண்டாடினுந் தம்முன்தம்பி
யத்தாசைபேசினு மாவதுண்டோ? தில்லையுண்ணிறைந்த
கத்தாவின் சொற்படியல்லாது வேறில்லை கன்மங்களே. 15

பிறவாதிருக்க வரம்பெறல் வேண்டும், பிறந்துவிட்டா
லிறவாதிருக்க மருந்துண்டு காணிது வெப்படியோ
அறமார் புகழ்த்தில்லை யம்பலவாண ரடிக்கமல
மறவா திருமனமே, யதுகாணநல் மருந்துனக்கே. 16

தவியாதிரு நெஞ்சமே, தில்லைமேவிய சங்கரனைப்
புவியார்ந் திருக்கின்ற ஞானாகரனைப் புராந்தகனை
அவியாவிளக்கைப் பொன்னம்பலத் தாடியை யைந்தெழுந்தாற்
செவியாமல் நீ□செபித்தாற் பிறவாமுத்தி சித்திக்குமே. 17

நாலின் மறைப்பொரு ளம்பலவாணரை நம்பியவர்
பாலிலொருதரஞ் சேவிக்கொணா திருப்பார்க் கருங்கல்
மேலிலெடுத்தவர் கைவிலங்கைத் தைப்பர். மீண்டுமொரு
காலினிறுத்துவர், கிட்டியுந் தாம்வந்து கட்டுவரே. 18

ஆற்றோடு தும்பை யணிந்தாடும் அம்பலவாணர்தம்மைப்
போற்றாதவர்க்கு அடையாளமுண் டேயிந்தப் பூதலத்திற்
சோற்றாவி யற்றுச்சுகமற்றுச் சுற்றத் துணியுமற்றே
ஏற்றாலும் பிச்சைகிடையாம லேக்கற் றிருப்பார்களே. 19

அத்தனை, முப்பத்து முக்கோடி தேவர்க் கதிபதியை
நித்தனை, அம்மை சிவகாமசுந்தரி நேசனை, யெம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூத்தனைப் பொன்னம் பலத்தாடு மையனைக் காணக்கண்கள்
எத்தனை கோடி யுகமோ தவஞ்செய் திருக்கின்றவே. 20

**முதலாவது கோயிற்றிருவகவல்**
(திருமண்டில ஆசிரப்பா)
நினைமின் மனனே! நினைமின் மனனே!
சிவபெரு மானைச் செம்பொனம் பலவனை
நினைமின் மனனே! நினைமின் மனனே!
அலகைத் தேரி னலமரு காலின்
உலகப்பொய் வாழ்க்கையை யுடலையோம் பற்க!

பிறந்தன இறக்கும், இறந்தன பிறக்கும்
தோன்றின மறையும், மறைந்தன தோன்றும்
பெருத்தன சிறுக்கும், சிறுத்தன பெருக்கும்
உணர்ந்தன மறக்கும், மறந்தன வுணரும்
புணர்ந்தன பிரியும், பிரிந்தன புணரும்

அருந்தின மலமாம், புனைந்தன அழுக்காம்
உவப்பன வெறுப்பாம், வெறுப்பன உவப்பாம்
என்றிவை யனைத்து முணர்ந்தனை, அன்றியும்
பிறந்தன பிறந்தன பிறவிக டோறும்
கொன்றனை யனைத்தும், அனைத்துநினைக் கொன்றன,

தின்றன யனைத்தும், அனைத்துநினைத் தின்றன
பெற்றன யனைத்தும், அனைத்துநினைப் பெற்றன
ஓம்பினை யனைத்தும், அனைத்துநினை யோம்பின
செல்வத்துக் களித்தனை, தரித்திரத் தழுகினை
சுவர்க்கத் திருந்தினை, நரகிற் கிடந்தனை,

இன்பமும் துன்பமும் இருநிலத் தருந்தினை
ஒன்றென் றெழியா துற்றனை, அன்றியும்
புற்பதக் குரம்பைத் துச்சி லொதுக்கிடம்
என்ன நின்றியங்கு மிருவினைக் கூட்டைக்
கல்லினும் வலிதாக் கருதினை, இதனுள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பீளையு நீரும் புலப்படு மொருபொறி
மீளுங் குறும்பி வெளிப்படு மொருபொறி
சளியு நீருந் தவழு மொருபொறி
உமிழ்நீர் கோழை யழுகு மொறிபொறி
வளியு மலமும் வழங்கு மொருவழி

சலமுஞ் சீயுஞ் சரியு மொருவழி
உள்ளூறத் தொடங்கி வெளிப்பட நாறுஞ்
சட்டக முடிவிற் சுட்டெலும் பாகும்
உடலுறு வாழ்க்கையை யுள்ளுறத் தேர்ந்து,
கடிமலர்க் கொன்றைச், சடைமுடிக் கடவுளை

ஒழிவருஞ் சிவபெரும் போகவின் பத்தைத்
நிழலெனக் கடவா நீர்மையடு பொருந்தி,
எனதற நினைவற இருவனை மலமற
வரவொடு செலவற மருளற இருளற
இரவொடு பகலற இகபர மறஒரு

முதல்வனைத் தில்லையுண் முளைத்தெழுஞ் சோதியை
அம்பலத் தரசனை, ஆனந்தக் கூத்தனை,
நெருப்பினி லரக்கென நெக்குநெக் குருகித்
திருச்சிற் றம்பலத் தொளிருஞ் சிவனை
நினைமின் மனனே! நினைமின் மனனே!

சிவபெருமானைச் செம்பொனம் பலவனை,
நினைமின் மனனே! நினைமின் மனனே!

**இரண்டாவது கோயிற்றிருவகவல்**

காதள வோடிய கலகப் பாதகக்
கன்னியர் மருங்கிற் புண்ணுட னாடுங்
காதலுங் கருத்து மல்லால்நின் னிருதாள்
பங்கயஞ் சூடப் பாக்கியஞ் செய்யாச்
சங்கடங் கூர்ந்த தமியேன் பாங்கிருந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கோ டிங்கோ டலமருங் கள்வர்
ஐவர் கலகமிட் டலைக்குங் கானகம்
சலமலப் பேழை யிருவினைப் பெட்டகம்
வாதபித் தங்கோழை குடிபுகுஞ் சீறூர்
ஊத்தைப் புன்தோ லுதிரக் கட்டளை

நாற்றப் பாண்டம், நான்முழத் தொன்பது
பீற்றத் துண்டம், பேய்ச்சுரைத் தோட்டம்
அடலைப் பெரிய சுடலைத் திடருள்,
ஆசைக் கயிற்றி லாடும் பம்பரம்
ஓயா நோய்க்கிடம், ஓரு மரக்கலம்

மாயா விகாரம், மரணப் பஞ்சரம்
சோற்றுத் துருத்தி, தூற்றம் பத்தம்
காற்றில் பறக்கும் காணப் பட்டம்
விதிவழித் தருமன் வெட்டுங் கட்டை,
சதுர்முகப் பாணன் தைக்குஞ் சட்டை

ஈமக் கனலி லிடுசில விருந்து
காமக் கனலிற் கருகுஞ் சருக்
கிருமிக் கிண்டுங் கிழங்கஞ் சருமி,
பாவக்கொழுந் தேறுங் கவைக்கொழு கொம்பு
மணமாய் நடக்கும் வடிவின் முடிவிற்

பிணமாய்க் கிடக்கும் பிண்டம், பிணமேல்
ஊரிற் கிடக்க வொட்டா வுபாதி
காலெதிர் குவித்த பூளை, காலைக்
கதிரெதிர்ப் பட்ட கடும்பனிக் கூட்டம்
அந்தரத் தியங்கு மிந்திர சாபம்

அதிரு மேகத் துருவி னருநிழல்
நீரிற் குமிழி நீர்மே லெழுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டுயில் கனவிற் கண்ட காட்சி
அதனினும் பொல்லா மாயக் களங்கம்
அமையு மமையும் பிரானே, யமையும்

இமைய வல்லி வாழியென் றேத்த
ஆனந்தத் தாண்டவங் காட்டி
ஆண்டுகொண் டருள்கைநின் னருளினுக் கழகே.

## மூன்றாவது கோயிற்றிருவகவல்

பாற்கடல் கடையப் படுங்கடு வெண்ணெயைத்
திருமிடற் றடக்கிய சிவனே யடைக்கலம்!
அடங்கலு மடக்கிடுங் கடுங்கோலைக் காலனைக்
காலெடுத் தடக்கிய கடவுள்நின் னடைக்கலம்
உலகடங் கலும்படைத் துடையவன் றலைபறித்து

இடக்கையி லடக்கிய இறைவ! நின் னடைக்கலம்!
செய்யபொன் னம்பலச் செல்வ! நின் னடைக்கலம்!
ஐய! நின் னடைக்கலம்! அடியநின் னடைக்கலம்
மனவழி விலைத்திடுங் கனவெனும் வாழ்க்கையும்
விழுப்பொரு ளறியா வழுக்குறு மனனும்

ஆண மலத்துதித் தளைந்ததி னுளைத்திடும்
நிணவைப் புழுவெனத் தெளிந்தெடு சிந்தையும்
படிறும் பாவமும் பழிப்புறு நினைப்பும்
தவறும் அழுக்காறும் இவறுபொய்ச் சாப்பும்
கவடும் பொய்யும் சுவடும் பெருஞ்சினம்

இகலும், கொலையும், இழிப்புறு புன்மையுங்
பகையும் அச்சமும் துணிவும் பனிப்பும்
முக்குண மடமையும், ஐம்பொறி மயக்கமும்
இடும்பையும் பிணியு மிடுக்கிய ஆக்கையை
உயிரெனுங் குருருவிட் டோடுங் குரம்பையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எலும்பொடு நரம்புகொண் டிடையிற் பிணித்துக்
கொழுந்தசை வேய்ந்து மொழுக்குவிழுங் குடிலைச்
செம்பெழு வுதிரச் சிறுபுழுக் குரம்பையை,
மலவுடற் குடத்தைப் பலவுடற் புட்டிலைத்
தொலைவிலாச் சோற்றுத் துன்பக் குழியைக்

கொலைபடைக் கலம்பல கிடக்கும் கூட்டைச்
சலிப்புறு வினைப்பல சரக்குக் குப்பையைக்
கோள்சரக் கொழுகும் பீறல் கோணியைக்
கோபத்தீ மூட்டுங் கொல்லன் துருத்தியை
ஐம்புலப் பறவை யடையும்பஞ் சரத்தை

புலராக் கவலை விளைமரப் பொதும்பை,
ஆசைக் கயிற்றி லாடுபம் பரத்தைக்
காசிற் பணத்திற் சுழலுங் காற்றாடியை,
மக்கள் வினையின் மயங்குங் திகிரியைக்
கடுவெளி யுருட்டிய சகடக் காலைப்

பாவச் சரக்கொடு பவக்கடல் புக்குக்
காமக் காற்றெடுத் தலைப்பக் கலங்கிக்
கெடுவழிக் கரைசேர் கொடுமரக் கலத்தை
இருவினை விலங்கொடு மியங்குபுற் கலனை
நடுவன்வந் தழைத்திட நடுங்கிடும் யாக்கையைப்

பிணமெனப் படுத்தியான் புறப்படும் பொழுதுநின்
அடிமலர்க் கமலத்துக் கபயநின் னடைக்கலம்
வெளியிடை யுருமிடி யிடித்தென வெறித்தெழுங்
கடுநடை வெள்விடைக் கடவுணின் னடைக்கலம்
இமையா நாட்டத் திறையே! அடைக்கலம்.

அடியார்க் கெளியாய்! அடைக்கல மடைக்கலம்
மறையவர் தில்லை மன்று நின் றாடிக்
கருணை மொண்டலையெறி கடலே! அடைக்கலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவரு முனிவருஞ் சென்றுநின் றேத்துப்
பாசிழைக் கொடியடு பரிந்தருள் புரியும்

எம்பெருமா நின்இணை யடிக்கு கபயம்
அம்பலத் தரசே அடைக்கல முனக்கே!

## நான்காவது கச்சித் திருவகவல்

திருமால் பயந்த திசைமுக னமைத்து
வருமேழ் பிறவியு மானுடத் துதித்து
மலைமகள் கோமான் மலரடி யிறைஞ்சிக்
குலவிய சிவபதங் குறுகா தவமே
மாதரை மகிழ்ந்து காதற் கொண்டாடும்

மானிடர்க் கெல்லாம் யானெடுத் துரைப்பேன்
விழிவெளி மாக்கள் தெளிவுறக் கேண்மின்.
முள்ளுங் கல்லு முயன்று நடக்கும்
உள்ளங் காலைப் பஞ்சென வுரைத்தும்
வெள்ளெலும் பாலே மேவிய கணைக்கால்

துள்ளும் வராலெனச் சொல்லித் துதித்தும்
தசையு மெலும்புந் தக்ககன் குறங்கை
இசையுங் கதலித் தண்டென வியம்பும்
நெடுமுடல் தாங்கி நின்றிடு மிடையைத்
துடிபிடி யென்று சொல்லித் துதித்தும்

மலமும் சலமும் வழும்புந் திரையும்
அலையும் வயிற்றை யாலிலை யென்றும்
சிலந்தி போலக் கிளைத்துமுன் னெழுந்து
திரண்டு விம்மிச் சீப்பாய்ந் தேறி
உகிராற் கீற வுலர்ந்துள் ளுருகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகுவார்க் கிடமாய் நான்று வற்றும்
முலையைப் பார்த்து முளரிமொட் டென்றும்
குலையுங் காமக் குருடர்க் குரைப்பேன்
நீட்டவு முடக்கவு நெடும்பொருள் வாங்கவும்
ஊட்டவும் பிசையவு முதவியிங் கியற்றும்

அங்கையைப் பார்த்துக் காந்தளென் றுரைத்தும்
வேர்வையு மழுக்கு மேவிய கழுத்தைப்
பாரினி லினிய கமுகெனப் பகர்ந்தும்
வெப்பு மூத்தையு மேவிய வாயைத்
துப்பு முருக்கின் தூய்மல ரென்றும்

அன்னமுங் கறியு மசைவிட் டிறக்கும்
முன்னிய பல்லை முத்தென மொழிந்தும்
நீருஞ் சளியு நின்றுநின் றொழுகும்
கூரிய மூக்கைக் குமிழெனக் கூறியும்
தண்ணீர் பீளை தவிரா தொழுகும்

கண்ணைப் பார்த்துக் கழுநீ ரென்றும்
உள்ளுங் குறும்பி யழுகுங் காதை
வள்ளைத் தண்டின் வளமென வாழ்த்தியும்
கையு மெண்ணெயுங் கலவா தொழியில்
வெய்ய வதரும் பேனும் விளையத்

தக்க தலையோட் டின்முளைத் தெழுந்த
சிக்கின் மயிரைத் திரண்முகி லென்றும்
சொற்பல பேசித் துதித்து நீங்கள்
நச்சிச் செல்லு நரக வாயில்
தோலு மிறைச்சியுந் துதைந்துசீப் பாயும்

காமப் பாழி, கருவிளை கழனி
தூமைக் கடவழி, தொளைபெறு வாயில்
எண்சா ணுடம்பு மிழியும் பெருவழி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்பாற் காமங் கழிக்கு மறைவிடம்,
நச்சிக் காமுக நாய்தா னென்றும்

இச்சித் திருக்கு மிடைகழி வாயில்
திங்கட் சடையோன் திருவரு ளில்லார்
தங்கித் திரியுஞ் சவலைப் பெருவழி
புண்ணிது வென்று புடவையை மூடி
உண்ணீர் பாயு மோசைச் செழும்புண்,

மால்கொண் டறியா மாந்தர் புகும்வழி
நோய்கொண் டொழியா நுண்ணியர் போம்வழி
தருக்கிய காமுகர் சாரும் படுகுழி
செருக்கிய காமுகர் சேருஞ் சிறுகுழி
பெண்ணு மாணும் பிறக்கும் பெருவழி

மலஞ்சொரிந் திழியும் வாயிற் கருகே
சலஞ்சொரிந் திழியுந் தண்ணீர் வாயில்
இத்தை நீங்க ளினிதென வேண்டா
பச்சிலை யிடினும் பத்தர்க் கிரங்கி
மெச்சிச் சிவபத வீடருள் பவனை

முத்தி நாதனை மூவா முதல்வனை
அண்ட ரண்டமு மனைத்துள புவனமும்
கண்ட வண்ணலைக் கச்சியிற் கடவுளை
ஏக நாதனை, இணையடி யிறைஞ்சுமின்
போக மாதரைப் போற்றுத லொழிந்தே!

**திருச்செங்கோடு**

நெருப்பான மேனியர் செங்கோட்டி லாத்தி நிழலருகே
இருப்பார் திருவுள மெப்படியோ இன்னமென்னை யன்னைக்
கருப்ப சாயக்குழிக்கே தள்ளுமோ கண்ணன் காணரிய
திருப்பாதமே தருமோ தெரியாது சிவன்செயலே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### திருவொற்றியூர்

ஐயுந்தொடர்ந்து, விழியுஞ் செருகி, யறிவழிந்து
மெய்யும் பொய்யாகி விடுகின்ற போதொன்று வேண்டுவன்யான்
செய்யுந் திருவொற்றி யூருடையீர், திருநீறுமிட்டுக்
கையுந்தொழப்பண்ணி யைந்தெழுத் தோதவுங் கற்பியுமே. 1

சுடப்படுவா ரறியார் புரம்முன்றையுஞ் சுட்டபிரான்
திடப்படு மாமதில்தென் ஒற்றியூரன் தெருப்பரப்பில்
நடப்பவர் பொற்பாத நந்தலைமேற்பட நன்குருண்டு
கிடப்பது காண்மனமே, விதியேட்டைக் கிழிப்பதுவே. 2

### திருவிடைமருதூர்

காடே திருந்தென்ன? காற்றே புசித்தென்ன? கந்தைகற்றி
யோடே யெடுத்தென்ன? உள்ளன்பி லாதவ ரோங்குவிண்ணோர்
நாடே யிடைமரு தீசர்க்கு மெய்யன்பர் நாரியர்பால்
வீடே யிருப்பனு மெய்ஞ்ஞான வீட்டின்ப மேவுவரே. 1

தாயும்பகைக் கொண்ட பெண்டீர் பெரும்பகைத் தன்னுடைய
சேயும்பகை யுறவோரும் பகை யிச்செகமும் பகை
ஆயும் பொழுதி லருஞ்செல்வம் நீங்கில்! இக்காதலினாற்
தோயுநெஞ்சே, மருதீசர் பொற்பாதஞ் சுதந்திரமே. 2

### திருக்கழுக்குன்றம்

காடோ? செடியோ? கடற்புறமோ? கனமேமிகுந்த
நாடோ? நகரோ? நகர்நடுவோ? நலமேமிகுந்த
வீடோ? புறத்திண்ணையோ? தமியேனுடல் வீழுமிடம்,
நீடோய் கழுக்குன்றி லீசா, உயிர்த்துணை நின்பதமே.

### திருக்காளத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்தும் புகுந்து பிறந்து வளர்ந்துபட் டாடைசுற்றி,
முத்தும் பவளமும் பூண்டோடி யாடி முடிந்தபின்பு
செத்துக் கிடக்கும் பிணத்தரு கேயினிச் சாம்பிணங்கள்
கத்துங் கணக்கென்ன? காண்கயிலாபுரிக் காளத்தியே! 1

பொன்னாற் பிரயோசனம் பொன்படைத் தார்க்குண்டு பொன்படைத்தோன்
தன்னாற் பிரயோசனம் பொன்னுக்கங் கேதுண்டு? அத்தன்மையைப்போ
உன்னாற் பிரயோசனம் வேணதெல்லாம் உண்டுஉனைப் பணியும்
என்னாற் பிரயோசன மேதுண்டு? காளத்தி யீச்சுரனே! 2

வாளால் மகவரிந்து ஊட்டவல்லேன் அல்லேன் மாதுசொன்ன
சூளாலிளமை துறக்கவல்லேன் அல்லன் தொண்டுசெய்து
நாளாறில் கண்ணிடத்து அப்பவல்லேன் அல்லன்நான் இனிச்சென்று
ஆளாவது எப்படியோ திருக்காளத்தி அப்பருக்கே? 3

முப்போது மன்னம் புசிக்கவுந் தூங்கவு மோகத்தினாற்
செப்போ திளமுலை யாருடன் சேரவுஞ் சீவன்விடு
மப்போது கண்கலக்கப் படவும் வைத்தா யையனே,
எப்போது காணவல்லேன்? திருக்காளத்தி யீச்சுரனே. 4

இரைக்கே யிரவும் பகலுந் திரிந்திங் கிளைத்துமின்னார்
அரைக்கே யவலக் குழியரு கேயசும் பார்ந்தொழுகும்
புரைக்கே யுழலுந் தமியேனை யாண்டருள், பொன்முகலிக்
கரைக்கேகல் லால நிழற்கீ ழமர்ந்தருள் காளத்தியே. 5

நாறுங் குதிரைச் சலதாரை தோற்புரை நாடொறுஞ்சீழ்
ஊறு மலக்குழி காமத்துவார மொளித் திடும்புண்
தேறுந் தசைப்பிளப் பந்தரங் கத்துள சிற்றின்பம்விட்டு
ஏறும் பதந்தரு வாய் திருக்காளத்தி யீச்சுரனே. 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்கைலாயம்

கான்சாயும் வெள்ளி மலைக்கரசே, நின்கழல் நம்பினேன்
ஊன்சாயுஞ் சென்ம மொழித்திடு வாய், காவூரனுக்காய்
மான்சாயுச் செங்கை மழுவலஞ் சாய வனைந்தகொன்றைத்
தேன்சாய நல்ல திருமேனி சாய்த்த சிவக்கொழுந்தே. 1

இல்லந் துறந்து பசிவந்த போதங் கிரந்துநின்று
பல்லுங் கரையற்று வெள்வாயுமாய், ஒன்றிற் பற்றுமின்றிச்
சொல்லும் பொருளு மிழந்து சுகானந்தத் தூக்கத்திலே
யல்லும் பகலு மிருப்பதென்றோ? கயிலா யத்தனே. 2

சிந்தனை யற்றுப் பிரியமுந் தானற்றுச் செய்கையற்று
நினைந்தது மற்று நினையா மையுமற்று நிர்ச்சிந்தனாய்த்
தனந்தனி யேயிருந் தானந்த நித்திரை தங்குகின்ற
அனந்தலி லென்றிருப் பேனத்தனை! கயிலாயத்தனே. 3

கையார ஏற்றுநின் றங்ஙனந் தின்று கரித்துணியைத்
தையா துடுத்து நின் சந்நிதிக்கே வந்துசந்ததமு
மெய்யார நிற்பணிந் துள்ளே யுரோமம் விதிர்விதிர்ப்ப
ஐயா வென்று ஓலமிடுவது என்றோ? கயிலாயத்தனே. 4

நீறார்த்த மேனி யுரோமஞ்சிலிர்த், துளம் நெக்குநெக்குச்
சேறாய்க் கசிந்து கசிந்தே யுருகி, நின்சீரடிக்கே
மாறாத் தியானமுற் றானந்த மேற்கொண்டு மார்பிற்கண்ணீர்
ஆறாய்ப் பெருகக் கிடைப்ப தென்றோ? கயிலாயத்தனே. 5

செல்வரைப் பின்சென்று சங்கடம் பேசித், தினந்தினமும்
பல்லினைக் காட்டிப் பரிதவியாமற் பரமானந்தத்தின்
எல்லையிற் புக்கிட வேகாந்தமாய் எனக்காம் இடத்தே
அல்லல் அற்று என்றிருப் பேனத்தனே, கயிலாயத்தனே. 6

மந்திக் குருளையத் தேனில்லை, நாயேன் வழக்கறிந்துஞ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்திக்குஞ் சிந்தையையான் என்செய்வேன் எனைத் தீதகற்றிப்
புந்திப் பிரிவிற் குருளையை யேந்திய பூசையைப்போல்
எந்தைக் குரியவன் காண் அத்தனே, கயிலாயத்தனே. 7

வருந்தேன் பிறந்து மிறந்தும் மயக்கும் புலன்வழிபோய்ப்
பொருந்தேன் நரகிற் புகுகின்றிலேன், புகழ் வாரிடத்தில்
இருந்தேன் இனியவர் கூட்டம் விடேன் இயலஞ்செழுத்தாம்
அருந்தேன் அருந்துவ நின் அருளால், கயிலாயத்தனே. 8

மதுரை

விடப்படுமோ இப்பிரபஞ்ச வாழ்க்கையை? விட்டுமனம்
திடப்படுமோ? நின்னருளின்றியே தினமே அலையக்
கடப்படுமோ? அற்பர்வாயிலிற் சென்று கண்ணீரததும்பிப்
படப்படுமோ? சொக்க நாதா, சவுந்தர பாண்டியனே.

பிணமெனப் படுத்தி யான் புறப்படும் பொழுது நின்
அடிமலர்க் கமலத்துக் கபய நின் னடைக்கலம்
வெளியிடை யுருமிடி யிடித்தென வெறித் தெழுங்
கடுநடை வெள்விடைக் கடவுணின் னடைக்கலம்
இமையா நாட்டத் திறையே! அடைக்கலம்.

அடியார்க் கெளியாய்! அடைக்கல மடைக்கலம்
மறையவர் தில்லை மன்று நின் றாடிக்
கருணை மொண்டலையெறி கடலே! அடைக்கலம்
தேவரு முனிவருஞ் சென்றுநின் றேத்துப்
பாசிழைக் கொடியடு பரிந்தருள் புரியும்

எம்பெருமா நின்இணை யடிக்கு கபயம்
அம்பலத் தரசே அடைக்கல முனக்கே!

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பட்டினத்தார்-பாடல்கள்

ஐயுந்தொடர்ந்து, விழியுஞ் செருகி, யறிவழிந்து
மெய்யும் பொய்யாகி விடுகின்ற போதொன்று வேண்டுவன்யான்
செய்யுந் திருவொற்றி யூருடையீர், திருநீறுமிட்டுக்
கையுந்தொழப்பண்ணி யைந்தெழுத் தோதவுங் கற்பியுமே. 1

பத்தும் புகுந்து பிறந்து வளர்ந்துபட் டாடைசுற்றி,
முத்தும் பவளமும் பூண்டோடி யாடி முடிந்த பின்பு
செத்துக் கிடக்கும் பிணத்தரு கேயினிச் சாம்பிணங்கள்
கத்துங் கணக்கென்ன? காண்கயிலாபுரிக் காளத்தியே! 2

வாளால் மகவரிந்து ஊட்டவல்லேன் அல்லேன் மாதுசொன்ன
சூளாலிளமை துறக்கவல்லேன் அல்லன் தொண்டுசெய்து
நாளாறில் கண்ணிடத்து அப்பவல்லேன் அல்லன்நான் இனிச்சென்று
ஆளாவது எப்படியோ திருக்காளத்தி அப்பருக்கே? 3

நீறார்த்த மேனியும் ரோமஞ் சிலிர்த்து உளம் நெக்கு நெக்குச்
சேறாய்க் கசிந்து கசிந்தே உருகி, நின் சீரடிக்கே
மாறாத் தியான முற்று ஆனந்த மேற்கொண்டு மார்பிற் கண்ணீர்
ஆறாய்ப் பெருகக் கிடைப்ப தென்றோ? கயிலாயத்தனே. 5

செல்வரைப் பின் சென்று சங்கடம் பேசித், தினந் தினமும்
பல்லினைக் காட்டிப் பரிதவியாமற் பரமானந்தத்தின்
எல்லையிற் புக்கிட ஏகாந்தமாய் எனக்காம் இடத்தே
அல்லல் அற்று என்றிருப்பேன் அத்தனே, கயிலாயத்தனே. 6

வருந்தேன் பிறந்தும் இறந்தும் மயக்கும் புலன் வழிபோய்ப்
பொருந்தேன் நரகிற் புகுகின்றிலேன், புகழ் வாரிடத்தில்
இருந்தேன் இனியவர் கூட்டம் விடேன் இயல் ஐஞ்செழுத்தாம்
அருந்தேன் அருந்துவன் நின் அருளால், கயிலாயத்தனே. 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லாப் பிழையும், கருதாப் பிழையும், கசிந்து உருகி
நில்லாப் பிழையும் நினையாப் பிழையும், நின் ஐஞ்செழுத்தைச்
சொல்லாப் பிழையுந், துதியாப் பிழையுந், தொழாப் பிழையும்
எல்லாப் பிழையும் பொறுத்தருள்வாய் கச்சியேகம்பனே. 9

ஊருஞ் சதமல்ல, உற்றார் சதமல்ல, உற்றுப் பெற்ற
பேருஞ் சதமல்ல, பெண்டீர் சதமல்ல, பிள்ளைகளும்
சீருஞ் சதமல்ல, செல்வஞ் சதமல்ல, தேசத்திலே
யாருஞ் சதமல்ல, நின்தாள் சதங் கச்சியேகம்பனே. 13

பிறக்கும் பொழுது கொடு வந்த தில்லை, பிறந்து மண்மேல்
இறக்கும் பொழுது கொடு போவ தில்லை இடை நடுவில்
குறிக்கும் இச் செல்வஞ் சிவன் தந்த தென்று கொடுக்க அறியாது
இறக்குங் குலாமருக் கென்சொல்லுவேன் ? கச்சியேகம்பனே ! 7

நல்லாய் எனக்கு மனுவொன்று தந்தருள், ஞானமிலாப்
பொல்லா எனைக் கொன்று போடும் பொழுதியல் பூசைசெபஞ்
சொல்லா நற்கோயில் நியமம் பலவகைத் தோத்திரமும்
எல்லா முடிந்தபின் கொல்லு கண்டாய் கச்சியேகம்பனே. 32

நாறு முடலை, நரிப்பொதி சோற்றினை, நான் தினமுஞ்
சோறுங் கறியும் நிரப்பிய பாண்டத்தைத் தோகையர்தம்
கூறும் மலமும் இரத்தமுஞ் சோருங் குழியில் விழாது
ஏறும் படியருள்வாய் இறைவா, கச்சியேகம்பனே. 34

எல்லாம் அறிந்து படித்தே யிருந்தெமக் குள்ளபடி
வல்லான் அறிந்துளன் என்றுணராது மதிமயங்கிச்
சொல்லான் அலைந்துறு சூழ்விதியின்படி துக்கித்துப்பின்
எல்லாம் சிவன் செயலே என்பார் காண் கச்சியேகம்பனே. 37

பொன்னை நினைந்து வெகுவாகத் தேடுவர், பூவை அன்னாள்
தன்னை நினைந்து வெகுவாய் உருகுவார், தாரணியில்
உன்னை நினைந்திங் உனைப் பூசியாத உலுத்த ரெல்லாம்
என்னையிருந்து கண்டாய் இறைவா் கச்சியேகம்பனே. 38



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொன்றேன் அனேக முயிரை எலாம் பின்பு கொன்று கொன்று
தின்றே அதன்றியும் தீங்குசெய்தேன் அதுதீர்க வென்றே
நின்றேன் நின்சன்னிதிக்கே அதனால் குற்றம் நீபொறுப்பாய்
என்றே உனை நம்பினேன் இறைவா, கச்சியேகம்பனே. 40

ஊரிருந்தென்ன ? நல்லோர் இருந்தென்ன உபகாரமுள்ள
பேரிருந்தென்ன ? பெற்ற தாய் இருந்தென் மடப்பெண்கொடியாள்
சீரிருந்தென்ன ? சிறப்பிருந் தென்ன இத்தேயததினில்
ஏரிருந்தென்ன ? வல்லாய் இறைவா கச்சியேகம்பனே. 41

கொல்லாமற் கொன்றதைத் தின்னாமற் குத்திரங்கோள்கள்
கல்லாமற் கைதவரோடு இணங்காமற் கனவினும் பொய்
சொல்லாமற் சொற்களைக் கேளாமற் தோகையர் மாயையிலே
செல்லாமற் செல்வந் தருவாய், சிதம்பர தேசிகனே. 6

முடிசார்ந்த மன்னரு மற்ற முள்ளோரு முடிவிலொரு
பிடிசாம்பராய் வெந்து மண்ணாவதுங் கண்டு பின்னு இந்தப்
பிடிசார்ந்த வாழ்வை நினைப்பதல்லாற் பொன்னினம்பலவ
ரடிசார்ந்து நாமுய்ய வேண்டு மென்றே அறிவாரில்லையே. 7

அன்னையாருக்கு இறுதிக்கடன் இயற்றும் பொழுது பாடியவை:
ஐயிரண்டு திங்களாய் அங்கம் எல்லாம் நொந்துபெற்றுப்
பையல் என்ற போதே பரிந்து எடுத்துச் - செய்ய இரு
கைப்புறத்தல் ஏந்திக் கனகமுலை தந்தாளை
எப்பிறப்பில் காண்பேன் இனி.

முந்தித் தவம்கிடந்து முந்நூறு நாள் சுமந்தே
அந்திபகலாச் சிவனை ஆதரித்துத் - தொந்தி
சரியச் சுமந்து பெற்ற தாயார் தமக்கோ
எரியத் தழல் மூட்டுவேன்.

வட்டிலிலும் தொட்டிலிலும் மார்மேலும் தோள்மேலும்
கட்டிலிலும் வைத்து என்னைக் காதலித்து - முட்டச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறகிலிட்டுக் காப்பாற்றிச் சீராட்டும் தாய்க்கோ
விறகிலிட்டுத் தீமூட்டு வேன்.

நொந்து சுமந்து பெற்று நோவாமல் ஏந்தி முலை
தந்து வளர்த்து எடுத்துத் தாழாமே – அந்திபகல்
கையிலே கொண்டு என்னைக் காப்பாற்றும் தாய் தனக்கோ
மெய்யில் தீமூட்டு வேன்.

அரிசியோ நான் இடுவேன் ஆத்தாள் தனக்கு
வரிசை இட்டுப் பார்த்து மகிழாமல் – உருசி உள்ள
தேனே அமிர்தமே செல்வத் திரவியப்பூ
மகனே என அழைத்த வய்க்கு.

அள்ளி இடுவது அரிசியோ தாய்தலைமேல்
கொள்ளிதனை வைப்பேனோ கூசாமல் – மெள்ள
முகமேல் முகம்வைத்து முத்தாடி என்றன்
மகனே என அழைத்த வய்க்கு.

**விருத்தம்:**

முன்னை இட்ட தீ முப்புரத்திலே
பின்னை இட்ட தீ தென் இலங்கையில்
அன்னை இட்ட தீ அடிவயிற்றிலே
யானும் இட்ட தீ மூள்க மூள்கவே.

**வெண்பா:**

வேகுதே தீ அதனில் வெந்து பொடிசாம்பல்
ஆகுதே பாவியேன் ஐயகோ – மாகக்
குருவி பறவாமல் கோதாட்டி என்னைக்
கருதி வளர்த்தெடுத்த கை.

வெந்தாளோ சோணகிசி வித்தகா நின்பதத்தில்
வந்தாளோ என்னை மறந்தாளோ – சந்தமும்
உன்னையே நோக்கி உகந்து வரம்கிடந்து
என்தன்னையே ஈன்று எடுத்த தாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீற்றிருந் தாள் அன்னைவீதி தனில் இருந்தாள்
நேற்று இருந்தாள் இன்று வெந்து நீறு ஆனாள் – பால் தெளிக்க
எல்லாரும் வாருங்கள் ஏது என்று இரங்காமல்
எல்லாம் சிவமயமே யாம்.

உடற் கூற்று வண்ணம்:
ஒருமடமாதும் ஒருவனும் ஆகி
இன்ப சுகம் தரும் அன்பு பொருத்தி
உணர்வு கலங்கி ஒழுகிய விந்து
ஊறு சுரோணித மீது கலந்து

பனியில் ஓர்பாதி சிறுதுளி மாது
பண்டியில் வந்து புகுந்து திரண்டு
பதுமம் அரும்பு கமடம் இதென்று
பார்வை மெய்வாய்செவி கால்கைகள் என்ற

உருவமும் ஆகி உயிர் வளர் மாதம்
ஒன்பதும் ஒன்றும் நிறைந்து மடந்தை
உதரம் அகன்று புவியில் விழுந்து
யோகமும் வாரமும் நாளும் அறிந்து

மகளிர்கள் சேனை தராணை ஆடை
மண்பட உந்தி உடைந்து கவிழ்ந்து
மடமயில் கொங்கை அமுதம் அருந்தி
ஓர் அறிவு ஈர் அறிவாகி வளர்ந்து

ஒளிந்கை ஊறல் இதழ்மட வாரும்
உகவந்து முகந்திட வந்து தவழ்ந்து
மடியில் இருந்து மழலை மொழிந்து
வா இரு போ என நாமம் விளம்ப
உடைமணி ஆடை அரைவடம் ஆட
உண்பவர் தின்பவர் தங்களொடு உண்டு
தெருவில் இருந்து புழுதி அளைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடிய பாலரொடு ஓடி நடந்து
அஞ்சு வயதாகி விளையாடியே

உயர்தரு ஞான குரு உபதேச
முந்தமிழின் கலையும் கரைகண்டு
வளர்பிறை என்று பலரும் விளம்ப
வாழ்பதினாறு பிராயமும் வந்து

மயிர்முடி கோதி அறுபத நீல
வண்டு இமிர் தண்தொடை கொண்ட புனைந்து
மணிபொன் இலக்கு பணிகள் அணிந்து
மாகதர் போகதர் கூடிவணங்க

மதனசொரூபன் இவன் எனமோக
மங்கையர் கண்டு மருண்டு திரண்டு
வரிவிழி கொண்டு கழிய எறிந்து
மாமயில் போல் அவர் போவது கண்டு

மனது பொறாமல் அவர் பிறகு ஓடி
மங்கல செங்கல சந்திகழ் கொங்கை
மருவமயங்கி இதழ் அமுதுண்டு
தேடிய மாமுத்ல் சேர வழங்கி

ஒருமுதல் ஆகி முதுபொருளாய்
இருந்த தனங்களும் வம்பில் இழந்து
மதன சுகந்த வதனம் இது என்று
வாலிப கோலமும் வேறு பிரிந்து

வளமையும் மாறி இளமையும் மாறி
வன்பல் விழுந்து இருகண்கள் இருண்டு
வயதுமுதிர்ந்து நரைதிரை வந்து
வாதவிரோத குரோதம் அடைந்து
செங்கையினில் ஓர் தடியுமாகியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருவது போவது ஒருமுதுகூனு
மந்தி எனும்படி குந்தி நடந்து
மதியும் அழிந்து செவிதிமிர் வந்து
வாய் அறியாமல் விடாமல் மொழிந்து

துயில் வரும் நேரம் இருமல் பொறாது
தொண்டையும் நெஞ்சும் உலர்ந்து வறண்டு
துகிலும் இழந்து கணையும் அழிந்து
தோகையர் பாலகர்கள் ஓரணி கொண்டு

கலியுகம் மீதில் இவர் மரியாதை
கண்டிடும் என்பவர் சஞ்சலம் மிஞ்ச
கலகல என்று மலசலம் வந்து
கால்வழி மேல்வழி சாரநடந்து

தெளிவும் இராமல் உரைதடுமாறி
சிந்தையும் நெஞ்சும் உலைந்து மருண்டு
திடமும் அழிந்து மிகவும் அலைந்து
தேறிநல் ஆதரவு ஏது என நொந்து

மறையவன் வேதன் எழுதியவாறு
வந்தது கண்டமும் என்று தெளிந்து
இனியென கண்டம் இனி என தொந்தம்
மேதினி வாழ்வு நிலாதினி நின்ற

கடன்முறை பேசும் என உரைநாவு
தங்கிவிழுந்து கைகொண்டு மொழிந்து
கடைவழி கஞ்சி ஒழுகிடவந்து
பூதமுநாலு சுவாசமும் நின்று
நெஞ்சு தடுமாறி வரும் நேரமே

வளர்பிறை போல எயிரும் உரோம
முச்சடையும் சிறுகுஞ்சியும் விஞ்சு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகதும் இருண்ட வடிவும் இலங்க
மாமலை போல் யாதூதர்கள் வந்து

வலைகொடு வீசி உயிர்கொடு போக
மைந்தரும் வந்து குனிந்தழ நொந்து
மடியில் விழுந்து மனைவி புலம்ப
மாழ்கினரே இவ காலம் அறிந்து

பழையவர் காணும் எனும் அயலார்கள்
பஞ்சு பறந்திட எஇன்றவர் பந்தர்
இடும் எனவந்து பறையிடமுந்த
வேபிணம்வேக விசாரியும் என்று

பலரையும் ஏவி முதியவர்தாம்இ
ருந்தசவம்கழு வுஞ்சிலர் என்று
பணிதுகில் தொஞ்கல் களபம் அணிந்து
பாவகமே செய்து நாறும் உடம்பை

வரிசை கெடாமல் எடும் எனஓடி
வந்து இளமைந்தர் குனிந்து சுமந்து
கடுகி நடந்து சுடலை அடைந்து
மானிட வாழ்வென வாழ்வென நொந்து

விறகுஇடை மூடிஅழள் கொடுபோட
வெந்து விழுந்து முறிந்துநிணங்கள்
உருகி எலும்பு கருகி அடங்கி
ஓர்பிடி நீறும் இலாத உடம்பை
நம்பும் அடியேனை இனி ஆளுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீரிழிவு நோய்

நீரிழிவு நோய் என்பது, உடலால் உணவிலிருந்து தேவையான சக்தியை எடுக்கவேண்டிய முறையில் எடுக்கமுடியாமலிருப்பதாகும். இது ஏனென்றால், உடல் போதியளவு இன்சுலினை சுரக்காமலிருப்பதனால் அல்லது சுரக்கப்படும் இன்சுலின் தகுந்த முறையில் வேலை செய்யாமலிருப்பதனால் ஆகும். இன்சுலின் ஒரு முக்கியமான ஹோர்மோன். உணவிலிருந்து எமது உயிரணுக்கள் சக்கரைச் சத்தை உறிஞ்ச உதவி செய்வதற்கு எமக்கு இன்சுலின் தேவைப்படுகிறது. பின்பு உயிரணுக்கள் சர்க்கரைச் சத்திலிருந்து சக்தியை உண்டாக்குகின்றன. சில சமயங்களில் உயிரணுக்கள் இன்சுலினுக்குப் பிரதிபலிப்பைக் காண்பிக்காது. இதுவும் நீரிழிவு நோயை ஏற்படுத்தலாம்.

இருபது லட்சத்திற்கும் மேலான கனேடிய மக்களுக்கு நீரிழிவு நோய் இருக்கிறது. ஒவ்வொரு வருடமும், 60,000க்கும் மேலானவர்களுக்கு நீரிழிவு நோய் கண்டு பிடிக்கப்படுகிறது.

***ஒருவருக்கு நீரிழிவு நோய் ஏற்படும்போது அவரது உடலில் என்ன சம்பவிக்கிறது?***

நீரிழிவு நோயுள்ள ஒருவர், அத்தியாவசியமான இன்சுலின் ஹோர்மோன் சுரப்பதை நிறுத்திவிடுகிறார் அல்லது அந்த நபரில் இன்சுலின் தகுந்த முறையில் வேலை செய்வதில்லை. ஹோர்மோன் என்பது, உடலின் பாகங்கள் என்ன செய்யவேண்டும் என்று சொல்வதற்காக உடலின் ஒரு பாகத்திலிருந்து மற்றொரு பாகத்துக்குப் பிரயாணம் செய்யும் ஒரு இரசாயனத் "தூதுவர்" ஆகும்.

நாம் உண்ணும் உணவிலுள்ள சக்கரையை, சக்தியாக மாற்றுவதற்கு நமது உடல் இன்சுலினை மாத்திரமே உபயோகிக்கமுடியும். அங்கு இன்சுலின் இல்லாவிட்டால், உயிரணுக்களால் சக்கரையைச் சக்தியாக மாற்றமுடியாது. "உபயோகிக்கப்படாத" சக்கரை இரத்தத்தில் ஒன்று சேர்க்கப்பட்டு சிறுநீர் மூலமாக உடலிலிருந்து வெளியேற்றப்படும்.

***பின்வருவனவற்றிற்கு எமக்குச் சக்தி தேவை:***

எமது உடல் வெப்பத்தை உற்பத்திசெய்வதற்கு

எமது தசைகள் வேலை செய்வதற்கு, எமது இதயங்கள் துடிப்பதற்கு, எமது நுரையீரல்கள் சுவாசிப்பதற்கு, எமது மூளை சிந்திப்பதற்கு எமது உடலிலிருக்கும் கோடிக்கணக்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிரணுக்களை வளர அனுமதிப்பதற்கு, புதிப்பிப்பதற்கு, மற்றும் சீர் செய்வதற்கு இன்சுலின் இல்லாமல் நம்மால் தொடர்ந்து வாழ முடியாது.

இன்சுலின் கணையத்தில் உற்பத்தியாகிறது. வயிற்றுக்கு சற்றுப் பின்னால் இந்த உறுப்பு அமைந்திருக்கிறது. கணையத்திலுள்ள பீட்டா உயிரணுக்கள் என்றழைக்கப்படும் விசேஷ உயிரணுக்கள் இன்சுலினைச் சுரக்கின்றன. பீட்டா உயிரணுக்கள் இலங்கர்கான் சிறு தீவுகள் என்று பெயரிடப்பட்ட திசுக்களின் கூட்டத்தில் காணப்படுகின்றன.

பல்வேறுவகைப்பட்ட நீரிழிவு நோய்கள் இருக்கின்றன. ஆனால் பிள்ளைகளும் பதின்ம வயதினரும் டைப் 1 நீரிழிவு நோயை பெறுகிறார்கள். டைப் 1 நீரிழிவு நோயில், பீட்டா உயிரணுக்கள் அழிக்கப்பட்டுவிடும். அதனால் உடலினால் எந்த இன்சுலினையும் சுரக்க முடியாது.

அதிகமதிகமான பதின்ம வயதினர் டைப் 2 நீரிழிவு நோயை பெறுகிறார்கள். இந்த வகையான நீரிழிவு நோயுடன், பெரும்பாலும் உடலால் கொஞ்சம் இன்சுலினைச் சுரக்கமுடியும். ஆயினும், இரத்தத்தில் சக்கரையின் அளவை இயல்பு நிலையில் வைத்துக்கொள்ள அல்லது போதுமானளவு நன்கு வேலை செய்வதில்லை அல்லது அதன் அளவு போதுமானதாக இருப்பதில்லை.

## நீரிழிவு நோய்க்குச் சிகிச்சை

நீரிழிவு நோய்க்கான சிகிச்சைக்கு இரண்டு இலக்குகள் இருக்கின்றன. ஒன்று, உங்கள் பிள்ளை ஆரோக்கியமாக இருப்பதற்காகவும் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய சிக்கல்களைத் தவிர்ப்பதற்காகவும், முடிந்தளவு இயல்பு நிலைக்கு அருகாமையில் இரத்தத்தில் சக்கரையின் அளவை நிலைநாட்டி அதைத் தக்கவைத்துக்கொள்வதாகும். இரண்டாவது, நீண்ட கால, ஆரோக்கியமான மற்றும் செழிப்பான வாழ்க்கையை வாழ்வதற்காக, உங்கள் பிள்ளை நீரிழிவு நோயுடன் வாழப்பழகிக்கொள்வதாகும்.

## டைப் 1 நீரிழிவு நோய்க்கான சிகிச்சை

டைப் 1 நீரிழிவு நோய்க்கான அடிப்படைச் சிகிச்சை உலகம் முழுவதும் ஒரே மாதிரியானது. அது பின்வருவனவற்றை உள்ளடக்கும்:

ஒரு நாளில் பல முறைகள் இன்சுலின் ஊசிமருந்தை எடுத்துக்கொள்வது, அல்லது உணவு நேரங்களில் மேலதிக மருந்தையும் மற்ற நேரங்களில் இன்சுலினை ஒரே சீராக வழங்கும் ஒரு பம்ப்பை உபயோகித்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நாளில் பல முறைகள் இரத்தத்தில் சக்கரையின் அளவைக் கண்காணித்தல்

ஒரு உணவுத் திட்டத்தைப் பின்பற்றுவது

மேலதிக நடவடிக்கைகளின்போது அதை மேலதிக உணவுடன் அல்லது சில வேளைகளில் குறைந்தளவு இன்சுலினுடன் ஈடு செய்வது

இந்த அடிப்படை வடிவமைப்புக்குள், வித்தியாசப்பட்ட உடல்நலப் பராமரிப்புக்குழுக்கள், உங்கள் பிள்ளையின் குறிப்பிட்ட தேவைகள் மற்றும் வீட்டில் உங்கள் குடும்பத்தின் வழக்கமான வேலைகளுக்கும் பொருந்தக்கூடிய ஒரு திட்டத்தை உருவாக்குவதற்காக உங்கள் குடும்பத்துடன் பணியாற்றுவார்கள். ஒவ்வொரு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை, வழக்கமான பரிசோதனைகளுக்காக உங்கள் பிள்ளையை மருத்துவமனைக்குக் கொண்டுவரும்படி கேட்கப்படுவீர்கள். இந்த மருத்துவமனைச் சந்திப்புக்களின்போது, உங்களுக்கு இருக்கும் ஏதாவது கவலைகள் பற்றி நீரிழிவுப் பராமரிப்புக் குழுவுடன் நீங்கள் கலந்து பேசலாம்.

**டைப் 2 நீரிழிவு நோய்க்கான சிகிச்சை**

ஆரோக்கியமான உணவு, உடற்பயிற்சி, எடையைக் குறைத்தல், மற்றும் அநேக இளைஞருக்கு மருந்துகள் என்பனவற்றின் இணைந்த செயற்பாட்டினால் டைப் 2 நீரிழிவு நோய் சமாளிக்கப்படுகிறது. பெரும்பாலாக எல்லாருக்கும் சிகிச்சை, வாழ்க்கைப்பாணியில் ஒரு மாபெரும் மாற்றத்தை உட்படுத்துகிறது.

முழுக் குடும்பத்தினரும் டைப் 2 நீரிழிவு நோயைப் பற்றிக் கற்றுக் கொண்டு அதே ஆரோக்கியமான வாழ்க்கைப் பாணியைப் பின்பற்றினால், பதின்ம வயதினருக்கு மிகச்சிறந்த வெற்றிவாய்ப்பு கிடைக்கும். அது உங்கள் பதின்ம வயதினருக்கு மிகப் பெரிய ஆதரவின் ஊற்றுமூலமாக இருக்கும். அத்துடன், குடும்பத்தின் மற்ற அங்கத்தினரும் நீரிழிவு நோய் ஏற்படும் அதிக அபாயத்தில் இருந்தாலும், நீரிழிவு நோயை விருத்தி செய்துகொள்ளும் அபாயத்தை அது குறைக்கக்கூடும்.

உணவுக் கட்டுப்பாடும் உடற்பயிற்சியும் மாத்திரமே இரத்தத்தில் சக்கரையின் அளவைக் கட்டுப்படுத்தாதிருக்கும்போது, உடலில் இன்சுலின் நன்கு வேலைசெய்ய உதவி செய்யக்கூடிய மாத்திரைகளை மருத்துவர் மருந்துக் குறிப்பெழுதிக் கொடுக்கக்கூடும். சில இளைஞருக்கு இன்சுலின் ஊசி மருந்தும் தேவைப்படலாம். ஆரோக்கியமான உணவு, ஒழுங்கான உடற்பயிற்சி, மற்றும் ஒரு ஆரோக்கியமான எடையை இலக்கு வைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைவதற்குக் கூர்ந்த கவனம் செலுத்த வேண்டிய தேவையை மாத்திரைகள் மற்றும் இன்சுலினும் மாற்றீடு செய்யாது. இவை டைப் 2 நீரிழிவு நோயின் சிகிச்சைக்கான மூலைக் கற்களாகும்.

*முக்கிய குறிப்புகள்*

நீரிழிவு நோய் என்பது உடல், உணவிலிருந்து சக்தியை உறிஞ்சிக்கொள்ளமுடியாத நிலைமையிலிருக்கும் ஒரு நோயாகும்.

உயிரணுக்கள் உணவிலிருந்து சக்கரைச் சத்தை உறிஞ்சி சக்தியை உண்டாக்க உதவி செய்வதற்கு உடலுக்கு இன்சுலின் தேவைப்படுகிறது.

டைப் 1 நீரிழிவு நோயில், உடல் இன்சுலினைச் சுரப்பதில்லை. இன்சுலின் ஊசி மருந்துகள், இரத்தத்தில் சக்கரையின் அளவைக் கண்காணித்தல், மற்றும் ஒரு உணவுத் திட்டத்தைப் பின்பற்றுதல் மூலமாக, டைப் 1 நீரிழிவு நோய்க்கு சிகிச்சையளிக்கப்படுகிறது.

டைப் 2 நீரிழிவு நோயில், பெரும்பாலும் உடலால் கொஞ்சம் இன்சுலினைச் சுரக்கமுடியும். ஆயினும், அது போதுமானதல்ல அல்லது நன்கு வேலை செய்வதில்லை. ஆரோக்கியமான உணவு, உடற்பயிற்சி, எடையைக் குறைத்தல், மற்றும் சில வேளைகளில் மருந்துகள் என்பனவற்றின் இணைந்த செயற்பாட்டினால் டைப் 2 நீரிழிவு நோய் சமாளிக்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# நன்றி நவிலல்

எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி மீளத் துயில் கொள்கின்ற எம் குடும்பத் தலைவன் இறைபதம் எய்திய செய்தி கேள்வியுற்று நேரில் வந்து எமக்கு உதவிகள் புரிந்து ஆறுதல் கூறியோருக்கும், தொலைபேசி மூலம் அனுதாபச் செய்திகள் தெரிவித்தோருக்கும், உடன் கருமங்கள் ஆற்ற உறுதுணை புரிந்தோருக்கும், அன்னாரின் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும், அந்தியெட்டி கிரியைகளிலும், ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும் எமது அழைப்பை ஏற்று வந்து மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் அனைவருக்கும் மற்றும் இம்மலரை குறுகிய கால இடைவெளியில் வடிவமைத்தும், அச்சிட்டும் தந்த "Global Graphics, Colombo 06" அச்சகத்திற்கும் எங்கள் இதயபூர்வமான நன்றிகளை தெரிவிக்கின்றோம்.

நன்றி


இங்ஙனம்

குடும்பத்தினர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்? அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய், அது வீணாகுவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொருநாள் அது வேறொருவருடையதாகும்.

**இந்தமாற்றம் உலக நியதியும்
எனது படைப்பின் சாரம்சமுமாகும்.**




பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்

*Printed By : Global Graphics. #14, Colombo Tamil Sangam Lane, Wellawatta, Colombo - 06. Tel : 2360678*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org